# ''ஆயதி'' - மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகளுக்காய் இலங்கையின் முதலாவது தேசிய நிலையம்

## களனி பல்கலைக்கழக மருத்துவ பீடம், இறாகமயில் நிறுவத்திட்டம்

**கொழும்பு, செப்டெம்பர் 19ஆம் திகதி:** வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையிலும், மாற்றுத்திறன் வாய்ந்த சிறுவர்களின் சுயாதீனமான இயக்கம், விசேட தேவைகள் மற்றும் கல்வி பயிலும் திறன்களை மேம்படுத்தும் வகையிலும், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் சமூகபொறுப்பு வாய்ந்த நடவடிக்கையாய் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் இணைந்து மாற்றுத்திறன் வாய்ந்த சிறுவர்களுக்காய் ''ஆயதி'' (AYATI) எனும் அதிஉன்னதமான தேசிய நிலையத்தை நிறுவுவதற்கு முன்வந்துள்ளது. ''ஆயதி'' எனும் சமஸ்கிருத சொலின் பொருள் ''நம்பிக்கை'' ஆகும்.

''ஆயதி'' நிலையத்தினூடாக, மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகளுக்கு தமது முழுமையான திறனை பயன்படுத்திக் கொள்வதற்கான நம்பிக்கையையும், வாய்ப்புகளையும் வழங்கி அவர்களை சமூகத்துடன் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேசிய மட்டத்தில் பெரும் சவாலாக இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைக்கு ''ஆயதி'' தீர்வாக அமையவிருப்பதுடன், இதன் மூலம் சிறுவர்களுக்கு முறையான பராமரிப்பை பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த தேசிய நிலையம் செயற்படும்.

இறாகமயில் அமைந்துள்ள களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இந்த நிலையம் நிறுவக்கபடவுள்ளது. இதன் மூலம் ஆசிய பிராந்தியத்தில் மாற்றுத்திறன் தொடர்பான கற்கைகளுக்கான ஒரே மருத்துவ பீட நிலையமாய் ''ஆயதி'' அமைந்திருக்கும். இந்த நிலையம் மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகளுக்கான முறையான பராமரிப்புகளை பெற்றுக் கொடுக்கும் நிலையமாய் அமையும். அதுமட்டுமல்லாமல் ''ஆயதி'' நிலையமானது இலகுவான முறையில் பேருந்தினாலும், புகையிரதத்தினாலும் சென்றடையக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இது பற்றி களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் நிலந்தி டி சில்வா கருத்துத்தெரிவிக்கையில், ''பல்வேறுபட்ட காரணங்கள் நிமித்தம் உலகளாவிய ரீதியில் மாற்றுத்திறன் என்பது அதிகரித்தவண்ணமாயுள்ளது. இது ஒரு தேசிய சவாலாய் இனங்காணப்பட்டுள்ளது. அந்தவகையில் இதனை நிவர்த்தி செய்வதற்காய் ''ஆயதி'' செயற்றிட்டத்தை அறிமுகம் செய்துள்ளமை மிக்க மகிழ்ச்சி. தற்போது நாம் மிகவும் சிறிய கிளினிக் ஒன்றில் மிகவும் குறைந்த வசதிகளுடன் செயற்பட்டு வருகிறோம். இந்த கிளினிக்கிள் சுமார் 1500 சிறுவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். புதிதாய் பிரேரிக்கப்பட்டுள்ள ''ஆயதி'' நிலையத்தில், பெருமளவு சமூகத்துக்கு சேவைகளை வழங்கக்கூடிய வசதிகள் காணப்படும். குறிப்பாக ஆரம்பகட்ட மதிப்பீடுகள் முதல், இடையீடுகளுடன் கூடிய சிகிச்சைகளும் வழங்கப்படும், அத்துடன் வாழ்க்கைத்திறன் தொடர்பான அடிப்படை தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படும். மருத்துவ மதிப்பீடுகள், பேச்சு மற்றும் மொழி சிகிச்சை, கேட்டலியல் மற்றும் தொழில் சார்ந்த சிகிச்சை போன்றவற்றுடன் உடற்பயிற்சி ரீதியான சிகிச்சைகளும் வழங்கப்படும்'' என்றார்.

பேராசிரியர் நிலந்தி டி சில்வா தொடர்ந்து தெரிவிக்கையில், ''எமக்கு முறையான பயிற்சிகள் மற்றும் ஆய்வு வசதிகள் கிடைத்துள்ளமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதன் மூலம் பல

பட்டதாரி மாணவர்களின் அனுபவத்தை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன், பல்கலைகழகத்துக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பட்டத்தாரிகளும் தமது அனுபவத்தை மேம்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கும். மேலும் மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகளின் பெற்றோருக்கு தமது குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளக்கூடியதாக வசதி கிடைக்கப்பெறும். இத்தகைய அளப்பரிய வசதிகளுடன் நிறுவப்படவுள்ள ''ஆயதி'' நிலையம் இலங்கையின் முதலாவது நிலையமாய் விளங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது'' என்றார்.

இத்தகைய தேவைகள் அமையப்பெற்ற சிறுவர்கள் தமது முழுத்திறனையும் எய்துவதற்கான ஆதரவினை மட்டுமின்றி, பெற்றோர்கள் மற்றும் சேவை வழங்குநர்களான மருத்துவ மாதுக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலைய ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவசியமான பயிற்சிகளை ''ஆயதி'' நிலையம் பெற்றுக்கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் ஏனைய அங்கீகாரம் பெற்ற நிலையங்களுடன் இந்நிலையம் தொடர்பை பேணும் என்பதுடன், பெற்றோருக்கு மேலதிக பரிந்துரைப்புகளை அல்லது சிகிச்சைகளை பெறுவதற்கு வாய்ப்பை வழங்குவதாக அமைந்திருக்கும்.

நிறுவப்படவுள்ள ''ஆயதி'' நிலையமானது, புகழ்பெற்ற கட்டடக்கலை நிபுணரான சன்ன தாஸ்வத்தயினால் வடிவமைக்கப்படவுள்ளதுடன், இறாகமயில் 1.5 ஏக்கர் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. 42,000 சதுர அடி நிலப்பரப்பை கொண்டிருக்கும். இந்நிலையத்தின் நிர்மாணப்பணிகளுக்கு ரூபாய். 350 மில்லியன் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் காணப்படும் இணைப்பு நிலைகளுக்கான மையமாக இந்நிலையம் இயங்கும் என்பதுடன், குறைந்த வளங்கள் காணப்படும் பகுதிகளுக்கு அவசியமான மருந்துப்பொருட்களை ஒதுக்கீடு செய்து வழங்கும் நடவடிக்கைகளையும் முதல் கட்டத்தில் முன்னெடுக்கவுள்ளது.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழுமப்பணிப்பாளரும், ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தின் தலைமை அதிகாரியுமான அப்பாஸ் ஈசுஃபாலி இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், ''இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி 2002ம் ஆண்டு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து நாம் முன்னெடுத்த ''பியவற'' சமூகப்பொறுப்புணர்வு செயற்றிட்டம் வெற்றிகரமாக இயங்கியிருந்ததை தொடர்ந்து நாம் இந்த AYATI திட்டத்தை அறிமுகம் செய்துள்ளோம். ''பியவற'' என்பது தற்போது தேசிய செயற்றிட்டமாக அமைந்துள்ளதுடன், இதன் கீழ் நாடு முழுவதிலும் 41 முன்பள்ளிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல பள்ளிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. பியவற முன்பள்ளிகளில் தற்போது சுமார் 100 ஆசிரியர்களும், 3500 மாணவர்களும் காணப்படுகின்றனர். இந்த செயற்றிட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன், இலங்கையின் மிகவும் வெற்றிகரமான பொது – தனியார் பங்காண்மைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடனான எமது பங்காண்மை ஊடாக நாம் பெற்றுள்ள நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை போன்றன, மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து எமக்கு கவனம் செலுத்த தூண்டுதலாக அமைந்திருந்தது'' என்றார்.

இந்த நிலையத்தை நிர்வாகிக்கும் பொறுப்பு காப்பாளர்களுக்கு வழங்கப்படும். இதில், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி முக்கிய பங்காற்றுவார். சுயாதீனமான கணக்காய்வு நிறுவனம் ஒன்று நிதி முகாமையாளராக நியமிக்கப்படும் என்பதுடன், கணக்கு மீளாய்வாளராக Ernst &Young செயலாற்றும்.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவன் என்டேர்பி கருத்துத்தெரிவிக்கையில், ‘‘இலங்கையில் காணப்படும் மாற்றுத்திறன் வாய்ந்த குழந்தைகளுக்கு, கல்வி, சுகாதாரம், சமூக பங்குபற்றல் மற்றும் தொழில் போன்றன சமத்துவ அடிப்படையில் கிடைக்கச்செய்வதை உறுதி செய்வதில் எமது பங்களிப்பை வழங்குவதே எமது இலக்காகும். நிறுவப்படவுள்ள ‘‘ஆயதி’’ நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நிதித்தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஹேமாஸ் வழங்க முன்வந்துள்ளதுடன், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டில் எம்முடன் கைகோர்க்குமாறு, ஏனைய கூட்டாண்மை வியாபார பங்காளர்களுக்கும் நிறுவனங்களுக்கும் நாம் அழைப்புவிடுக்கிறோம்’’ என்றார்.

இந்த செயற்றிட்டத்துக்கான உதவிகளை வழங்க கிரிக்கட் நட்சத்திரங்களான குமார் சங்கக்கார மற்றும் ரொஷான் மஹாநாம ஆகியோர் முன்வந்துள்ளனர். இவர்கள் ‘‘ஆயதி’’யின் காப்பாளர்களாக செயலாற்றவுள்ளனர். இவர்கள் மாற்றுத்திறன் வாய்ந்த மாணவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்ப்பதுடன், இந்த நிலையத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான உதவிகளையும் வழங்கவுள்ளனர்.

**முற்றும்.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

ஷிரோமி மஸக்கோறல,
நிறைவேற்று பணிப்பாளர் – ஹேமாஸ் அவுட்ரீச் அமைப்பு
தலைவி – குழும நிலைபேண்தகு மற்றும் கூட்டு நிறுவன தொடர்பாடல் - ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம்
தொடர்பு இலக்கம்: 011 4731731 அல்லது 077 3020028